**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 139/2024 |
| Prosecution Witness | : | **அ.சா.**31 |
| Name | : | **தர்சனா** |
| Father Name | : | **கணேசன்** |
| Address | : | **செட்டிக்குளம்** |
| Age | : | 25/2025 |

**தேதி : 24.06.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் செட்டிக்குளத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்துவருகிறேன். லோன் எடுத்து கொடுத்த வகையில் வசந்தி எனக்கு பழக்கம். கடந்த 2024ம் ஆண்டு எதிரி வசந்தி அவருடைய மாமனாருக்கு உடல்நிலை சரியில்லை என்று சொல்லி என்னிடம் லோன் வாங்கி கொடுக்கச் சொன்னார். நான் முதலில் முடியாது என்று சொன்னேன். தொடர்ந்து கேட்டதால் பெரம்பலூரில் உள்ள Equitas தனியார் நிதி நிறுவனத்தில் ரூ.55,000/- கடன் வாங்கிகொடுத்தேன். தவணைகளை அவரே கட்டிவிடுவதாக சொன்னதால் லோன் வாங்கிகொடுத்தேன். ஒரே ஒரு தவணை மட்டும் கட்டினார். அதன்பிறகு கட்டவில்லை. விசாரித்தபோது அவருடைய மாமனார் ் இறந்துவிட்டதாக சொன்னார்கள். அதன்பிறகு எதிரியை சென்று பார்த்தபோது அவரை காணவில்லை. நிதி நிறுவனத்தார் என்னிடம் வந்து பணத்தை கட்டச்சொன்னார்கள். தற்போது தவணை தொகைகளை நான்தான் கட்டிவருகிறேன்.

ஊரில் விசாரித்தபோது வசந்தி நிறைய பேரிடம் லோன் வாங்கிகொண்டு திரும்ப கட்டாமல் ஏமாற்றிவிட்டதாக சொன்னார்கள். அதன்பிறகு பெரம்பலூரில் எஸ்.பி. ஆபிஸில் புகார் கொடுக்க சுமார் 20 பேர் சென்றோம். சத்தியா என்பவர் புகார் கொடுத்தார். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் தற்போது நீதிமன்றத்தில் சொன்ன விவரங்களைத்தான் போலீஸார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். போலீஸார் விசாரணையில் எந்த தேதியில், எந்த நிதிநிறுவனத்தில் நான் கடன் வாங்கி கொடுத்தேன் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. வசந்தி என்னுடைய பக்கத்து வீடா என்றால் இரண்டு தெரு தள்ளி இருக்கிறார். இதற்கு முன்பு வசந்தி எனக்கு லோன் வாங்கிகொடுத்துள்ளார். போலீஸார் விசாரித்தபோது வசந்தியின் மாமனாருக்கு உடல்நிலை சரியில்லை என்று கடன் கேட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து எதிரியிடம் பணம் கேட்டதால் அவரால் தரமுடியவில்லை என்றாலும், எதிரிக்கு எங்களை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணம் இல்லை என்றாலும் சரியல்ல. நான் போலீஸாருக்கு ஆதரவாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court read over / interpreted to the witness in the presence of the accused / accused/ pleader and admitted by the witness to be correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.